**சுருக்கம்**

பொது விநியோகத் திட்டம் – கோதுமை ஒதுக்கீடு (OMSS) – பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கோதுமை மற்றும் கோதுமை மாவு வழங்கும் அளவை உயர்த்தி வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (டி1) துறை**

**அரசாணை (நிலை ) எண். 22** **நாள்: 26.2.2010**

**மாசி 14, திருவள்ளுவர் ஆண்டு 2041**

**படிக்க:-**

1) அரசானை (நிலை) எண் 98, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3.8.2009.
2) உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரின் கடிதம் ந.க.எண். உ3/7254/2009, நாள் 5.11.2009 மற்றும் 21.1.2010.
3) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநரின் கடிதம் ஆர்.சி.எண். பிஎஸ் 10/103990/2009, நாள் 16.11.2009 மற்றும் 10.12.2009.

-------

**ஆணை:-**

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படும் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு பொது மக்களிடையே பெருத்த வரவேற்பு பெற்றுள்ளதாலும், செறிவூட்டப்பட்ட கோதுமை மாவுக்கு கூடுதல் கோதுமை ஒதுக்கீடு செய்ய வேண்டிய அவசியத்தைக் கருதி கூடுதலாக தேவைப்படும் கோதுமையை டன் ஒன்றுக்கு ரூ. 10,800 என்ற விலையில் மைய அரசிடமிருந்து பொருளாதார விலையில் பெறப்பட்ட கோதுமையிலிருந்து, மாதம் 2,500 மெட்ரின் டன் வழங்கி பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் 2,500 மெட்ரின் டன் கோதுமையுடன் இதையும் சேர்த்து மாதம் ஒன்றிற்கு மொத்தம் 5,000 மெட்ரிக் டன் கோதுமையை செறிவூட்டப்பட்ட கோதுமை மாவாக அரைப்பதற்காக பார்வை 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் தக்க ஆணைகளை அரசு வெளியிட்டுள்ளது.

2. உணவுப் பொருட்களின் விலையேற்றத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்குடன் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மத்திய அரசால் தனி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கோதுமையைக் கணக்கில் கொண்டு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் பின்வரும் கருத்துருக்களை அரசுக்கு அனுப்பியுள்ளார் :-

(i) தமிழ்நாட்டில் கோதுமை நுகர்வு அதிகரித்து வருவதைக் கருத்திற்கொண்டு வெளிச்சந்தை விற்பனை விலைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கோதுமையைப் பயன்படுத்தி பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் 17000 டன்கள் கோதுமையாக வழங்கலாம்.

(ii) செறிவூட்டப்பட்ட கோதுமை மாவாக வழங்குவதற்கு 7500 டன்கள் வெளிச்சந்தை விற்பனை விலைத்திட்ட கோதுமையை ஒதுக்கீடு செய்யலாம்.

(iii) செறிவூட்டப்பட்ட கோதுமை மாவை கிலோ ஒன்றுக்கு ரூ. 11 என்ற விலையில் தொடர்ந்து வழங்கலாம். இதனால் ஏற்படும் கூடுதல் செலவு ரூ. 3.88 கோடியை அரசு மானியமாக வழங்கலாம்.

3. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரின் கருத்துருக்களை நன்கு பரிசீலனை செய்து பின்வரும் ஆணைகளை அரசு வெளியிடுகிறது.

(i) பொது விநியோகத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் 13783 டன்கள் கோதுமையில், கோதுமை மாவு தயாரித்து வழங்கத் தேவைப்படும் 2500 டன்கள் கோதுமை போக மீதமுள்ள 11283 டன்கள் கோதுமையா வழங்கப்படுகிறது. இந்த அளவை உயர்த்தி மாதம் ஒன்றுக்கு 15000 டன்கள் கோதுமையாகவே வழங்குவதற்கு தேவைப்படும் 3717 டன்கள் கோதுமையை தற்போது கூடுதலாக செய்யப்பட்டுள்ள தனி ஒதுக்கீடு அளவான 27326 டன்களிலிருந்து சரி செய்து கொள்ளப்பட வேண்டும்.

(ii) பொது விநியோகத் திட்டத்திற்காக மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட கோதுமையிலிருந்து 2500 டன்களையும், கையிருப்பில் உள்ள குறைந்தபட்ச ஆதார விலை அடிப்படை விலையில் செய்யப்பட்ட ஒதுக்கீடு மற்றும் வெளிச்சந்தை விற்பனை விலைத் திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட ஒதுக்கீட்டிலிருந்து 2500 டன்கள் கோதுமை ஆக மொத்தம் 5000 டன்கள் கோதுமையை செறிவூட்டப்பட்ட கோதுமை மாவாக வழங்க ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். பொது விநியோகத் திட்டத்தில் கோதுமை மாவின் நுகர்வுக்கு ஏற்ப, தேவைப்படின் 5000 டன்கள் அளவை, 7500 டன் வரை உயர்த்துவது பற்றி பரிசீலிக்கப்படும். செறிவூட்டப்பட்ட கோதுமை மாவின் விற்பனை விலையை தொடர்ந்து கிலோ ரூ. 11க்கு விற்பனை செய்தால் அடக்க விலைக்கும் விற்பனை விலைக்கும் ஏற்படும் விலை வித்தியாசத் தொகை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழங்க அனுமதி வழங்கப்படுகிறது.

(iii) தற்போது மைய அரசால் கூடுதல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கோதுமையின் விலை வெளிச்சந்தை விற்பனைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கோதுமையின் விலையைவிட குறைவாக உள்ளதால், ஜனவரி 2010 முதல் மார்ச் 2010 வரை உள்ள காலாண்டிற்காக வெளிச்சந்தை விற்பனைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட 30893 டன்கள் கோதுமையை இந்திய உணவுக் கழகத்திலிருந்து எடுத்து பயன்படுத்துவது குறித்து சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு பின்னர் பரிசீலிக்கப்படும்.

4. இவ்வாணை நிதித் துறையின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது. (அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 10624/நிதி (கூ.உ.(ம).நு.பா.)/10, நாள் 26.2.2010.)

(ஆளுநரின் ஆணைப்படி)

க. சண்முகம்
அரசு முதன்மை செயலாளர்

**பெறுநர்**
ஆணையாளர்,
உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
சென்னை – 600 005.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை 600 010.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம்,
சென்னை – 600 009.
மாண்புமிகு நிதித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை – 600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை – 600 009.
மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை – 600 009.

நகல்:–
நிதி (கூ.உ.(ம).நு.பா.)/த் துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.